ஜனாதிபதி-நிதிமந்திரி கருத்துக்களில் முரண்பாடு!

விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 27 ஜ. அவ். 25 இதழ் 29

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11—3—83

பட்ஜட் விவாதத்தில் நல்லூர் சிவா

(இ. சந்தசாமி)

"உலகவங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவற்றிடம் அடைக்கலம் புகுந்தால் உள்நாட்டில் பெரும் இக்கட்டான நிலை ஏற்படும் என்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பே நாம் எச்சரிக்கை செய்தோம். அதை இப்பொழுதுதான் ஜனாதிபதி உணர்ந்துகொண்டிருக்கிறார்."

இவ்வாறு நல்லூர் எம். பி யும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் நேற்று கூறினார். நிதியமைச்சரின் வரவுசெலவுத் திட்ட உரையின்மீதான விவாதத்தை எதிர்க்கட்சிகள் சார்பில் ஆரம்பித்துவைத்து திரு. சிவசிதம்பரம் பேசினார்.

உலக வங்கி, சர்வதேச நாணயசபை ஆகியவற்றில் கடன்பெற்று அபிவிருத்தித் திட்டங்களை செய்வதால் விலைவாசிகள் அதிகரிப்பதாக ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தனா புதுடில்லியில் அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாட்டில் தெரிவுத்துள்ளார். நிதியமைச்சரோவெனில் உலக வங்கி, சர்வதேச நாணயசபைகளின் விருப்பப்படி தாம் நடக்கவில்லையென்று இங்கு கூறுகிறார். அந்த ஸ்தானங்களிடம் அடைக்கலம் புகுந்தால் இக்கட்டான நிலை ஏற்படும் என்று நாங்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கூறினோம். ஜனாதிபதி அவர்கள் இன்றுதான் அதை உணர்ந்துள்ளார் என்று திரு. சிவசிதம்பரம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்த வரவுசெலவுத்திட்டம் பெரும்பாலான மக்களுக்கு துன்பத்தையும் ஒரு சிலருக்கு இன்பத்தையும் கொடுத்திருக்கிறது.

கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற உயர்மட்ட அந்தஸ்தில் இருப்பவர்களுக்கு இது மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது நிதி அமைச்சர் தமது உரையில் புதிதாக ஒன்றையும் தெரிவித்துவிடவில்லை. வரவு செலவுத் திட்டத்தை அவர் இரண்டு அம்சங்களாக வெளியிட்டிருக்கிறார். ஒன்று 18ம் திகதி கஸட் அறிவித்தல் உருவில் வெளியிடப்பட்டது மற்றது எவருக்கும் தெரியாமல் நடந்துள்ள ரூபாயின் மதிப்பிறக்கம். உலக சந்தையில் இன்று எமது ரூபாயின் மதிப்பு வெகுவாகக் குறைந்துவிட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

ஆயுள்வேத மாணவர் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாக வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, அபிவிருத்திசபை உறுப்பினர் டாக்டர் ஆ. நடராசா ஆகியோர் மாணவர்களை நேரில் சந்தித்து பிரச்னைகளை கேட்டறிந்தனர். (மா)

ராணுவ கெடுபிடியைத் தொடர்ந்து

தனியார் வீடுகளிலிருந்து மாணவர் வெளியேற்றம்!

யாழ். பல்கலைக் கழகத்தில் பெட்டி படுக்கையுடன் தஞ்சம்

(ஏ. வி. மாணிக்கம்)

தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆயுதப்படையினரால் அடிக்கடி இடைஞ்சலுக்குள்ளாக்கப்படுவதாகவும் அதனால் அவ்வீடுகளின் உரிமையாளர்கள் மாணவர்களை தம்வீடுகளிலிருந்து வெளியேற்றி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு நிர்க்கதிக்குள்ளான சுமார் 500 பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் நேற்று தமது பெட்டி படுக்கைகளுடன் பல்கலைக்கழகத்தில் பிரவேசித்து அங்கு தங்கி இருந்து வருகிறார்கள்.

இந்த நிலைமையால் யாழ். பல்கலைக்கழகத்தில் மிகவும் பதட்டமான ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதுவரை ஐந்து மாணவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மாணவர்களைக் கைது செய்ய ராணுவத்தினர் தம் வீட்டுக்குள் பிரவேசிப்பதால் வீட்டுக்காரர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாவதாகவும் அதனால் மாணவர்களை தனியார் தம் வீடுகளில் குடியிருக்க அனுமக்கிறார்கள் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் நேற்று அவசரமாகக் கூடி ஆலோசித்து சில முடிவுகளை அறிவித்துள்ளார்கள்.

இருக்க இடமின்றி அல்லல்படும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அக்கோரிக்கைகள் நிறைவேறும் வரை வகுப்புகளுக்குச்

8-ம் பக்கம் பார்க்க]

தமிழ்ஈழ நிதியமைச்சராய் நல்லூர் எம். பி. இருந்தால்..!

[கொழும்பு]

உத்தேச தமிழ் ஈழத்தின் நிதியமைச்சராக நல்லூர் உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் பதவி ஏற்பாரானால் அவரும் எங்களைப்போல உலக வங்கிக்கும் சர்வதேச நாணயசபைக்கும் கடன் கேட்டுச் செல்லவே செய்வார். குறுகிய காலகடன் கேட்டுகொழும்புக்கும் வருவார் என்று வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வரவு செல

(8-ம் பக்கம் பார்க்க)

லலித் ஹேஷ்யம்

கரணவாயிலும் தாக்குதல்

[கரவெட்டி]

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் வைத்து வீதியில் நின்ற மக்களை இராணுவத்தினர் தாக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி ட்ரக்கிலும், ஜீப்பிலும் வந்த இராணுவத்தினரே வீதியில் நின்ற மக்களைத் தாக்கியுள்ளனர்.

இச்சம்வத்தினால் கரணவாயைச் சேர்ந்த கி. விசுவலிங்கம் (50 வயது) என்பவர் படுகாயமடைந்து, மந்திகை அரசினர்வைத்தியசாலையில் கிகிச்சை பெற்றுவருகிறார்.

திருமலையைச் சேர்ந்த 5 மாணவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திலும், தொழில்நுட்பக்கல்லூரியிலும் கல்வி பயிலும் ஐந்து மாணவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஐவரும் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள்.

எஸ். செல்வநாயகம் (புவியியல் கிறப்பு இறுதி வருடம்), எஸ். மோகனசுந்தரம் (புவியியல் 3-ம் வருடம்), யாழ் கச்சேரி வீதியிலுள்ள வீடு ஒன்றில் இருப்பவர்கள். ஜி சந்திரகுமார் (முதலாம் வருடம் முகாமைத்துவ கற்கை நெறி, கல்வியங்காடு வீடொன்றில்

(8ம் பக்கம் பார்க்க)

'சிவா-யோகேஸ்' வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தனியார் வீடுகளில் தங்கியிருந்து யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களை வீடுகளிலிருந்து வெளியேற்றவேண்டாமென யாழ், எம் பி திரு வெ யோகேஸ்வரனும், நல்லூர் எம். பி திரு. எம் சிவசிதம்பரமும் வீட்டு உரிமையாளர்களுக்கு வேண்டு

(8 ம் பக்கம் பார்க்க)

வீடு விற்பனைக்கு

பண்டியன்தாள் அன்னம்மாள் கோவில் முன்பாக புது வீடு வளவுடன் கூடிய 1¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு; S. ஜெகநாதன், இல.5, வேம்படி ரோட், யாழ்ப்பாணம். (செல்வி G. T வடிவேல்)

(6504)

தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஜனாதிபதிக்கு மகஜர்

(கோண்டாவில்)

பல்தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் செல்வராசா ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இன்னமும் விடுதலை செய்யப்படாததுகுறித்துமேற்படி கல்லூரி மாணவர்கள் ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தனா, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம், கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா, தேசிய தொழில் பயிற்சி இயக்குநர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

மாணவன் செல்வராசா விரிவுரைகளில் கலந்துகொண்டி

(8ம் பக்கம் பார்க்க)

உ

சிவமயம்

நகுலேஸ்வரம் கீரிமலை

அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வர ஆலய

தேர் உற்சவ மகாசிவராத்திரிவிழா

நிகழும் துந்துபி வருடம் மாசி மாதம்

12 3-83 சனிக்கிழமை

காலை 7 மணிக்கு இரதோற்சவம்

மாலை 4 மணிக்கு மூர்த்திகள் சர்வாலங்காரத்துடன் திரரகூளமாடி யதாஸ்தானத்திற்கு எழுந்தருளல்

மாலை 5 மணிக்கு சனிப்பிரதோஷ பூசை

மாலை 6 மணி தொடக்கம் நான்கு சாம அபிஷேக விசேட பூசை மகாசிவராத்திரி உற்சவமும்

13-3-83 ஞாயிறு உதயம் சமுத்திர தீர்த்தம் நடைபெறும்.

12-3-83 பிற்பகல் 3 மணி தொடக்கம் அதிகாலை வரை விசேட இன்னிசைக்கச்சேரி, நாதஸ்வர தவில்கச்சேரி, உபன்னியாசங்கள் ஆகியன நடைபெறும்.

இங்ஙனம்

கு. நகுலேஸ்வரக்குருக்கள்

★ மேற்படி தேவஸ்தான அன்னதானசபையினரால் இரு தினமும் வழமைபோல் அன்னதானம் நடைபெறும்.

(6503)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

மருத்துவக்கல்லூரிக்கு முன்னால் மூன்றே முக்கால் (நில பர 3, 3/4) காணிகிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- திருமதி Dr. V. பொன்னையா இல. 46, பொற்பதி ரோட், கொக்குவில். [6474]

காங்கேசன்துறை - கீரிமலை வீதியில் பட்டின சபை காரியாலயம், சீமெந்துக் கூட்டுத் தாபனம், துறைமுகம், வைத்தியசாலை, வங்கி, தபால் கந்தோர் முதலியவற்றிற்குச்சமீபமாக 6 1/2 பரப்புவரை காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி; ப. வேலாயுதம், நியூகோ பில்டிங் அருகாமையில் காங்கேசன்துறை. 6447

பருத்தித்துறை நகரில் சிவன் கோயிலுக்கு அருகாமையில் கிணறு மின்சார வசதியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: திருநாவுக்கரசு (பேபி), சிவன்கோயிலடி, பருத்தித்துறை. 6379

2 சிலிண்டர் டீசல் பெற்றர் இயந்திரமும் 5 K V A. டைனமோவும் உடன் விற்பனைக்குண்டு. சிவபாலமூர்த்தி 6/2, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். 6492

ஜோதிட உலகின் புகழ் பெற்ற முன்னோடிகளான, தெல்லிப்பளை ஆயர்பாடி ஜோதிட நிலையத்தாரின் (1983-84 ருதிரோற்காரி) ஆயர்பாடி வருஷ ராசிபலன்கள் வெளிவந்து விட்டன. தமிழ் சித்திரை முதல் ஒரு வருஷ பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் தனித்தனிப் பிரதிகள் எங்கும் எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். தபாலில் பெற ராசியையும் குறிப்பிட்டு 10×50 சத முத்திரை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: நிர்வாகி ஆயர்பாடி ஜோதிட நிலையம் தெல்லிப்பளை. 6485

தேவை

(Binder, Compositor) பைன்டர், அச்சுக்கோப்பாளர் உடன் தேவை. இரவு வேலை (Night shift) செய்பவர்களும் வரலாம். நேரில் வரவும். சித்திரா அச்சகம் 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 6471

மணமான் தேவை இந்து வேளாளர் குலத்தை சேர்ந்த நற்குணம் உடைய 30 வயது பெண்ணுக்கு நற்குணமும் ஆங்கில அறிவுடைய நன்கு படித்த 36 வயதுடைய மணமகன் தேவை. இயந்திர சாதனங்களுடன் அனுபவமும் படித்த அதற்குரிய நற்சான்று பத்திரங்களும் உள்ளவர் விரும்பத்தக்கது. பெருந்தம் உடையவருக்கு அமெரிக்கா நாட்டில் வேலைவாய்ப்பும் வசிப்பிடமும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். சாதக குறிப்புடனும் தகமைகளுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 6464 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 6464

வகுப்புகள்

தூய/பிரயோக கணிதம்/இரசாயனம் G C E (A/L - LON/CEY பரீட்சைக்கான வகுப்புகளும் G C E (O/L) கணித வகுப்பும் 11-3-83 இல் ஆரம்பமாகின்றன, துரித மீட்டற் பயிற்சியும் நடைபெறும். Mr. J X G. Carvalho, B. Sc (Honours) London 108, 4-ம், குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6467)

ஆங்கில மூலம் A/L. G S.Q, B. Sc. பௌதிகம், இரசாயனம், தூய/பிரயோககணிதம் விஞ்ஞான செய்கை முறைகளும் அளிக்கப்படும். 25-03-83க்கு முன் விண்ணப்பிக்கவும் அதிபர் The College of Higher Studies, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 6486

பயிற்சி

கஜன் தொழில் நுட்பப் பயிற்சி நடைபெறுகின்றன. வெல்டிங் (Arc and Gas) எலற்றிக் வயறிங் பிற்றிங், P. M. G'S ரான்ஸிஸ்ரர் தொழில் நுட்பம், கட்டிடக்கலை படம் வரைதல் ஆங்கில உரையாடல் முதலியன. 555, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [6468]

விளம்பரம்

மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்
லொறி இல 24ஸ்ரீ9355
திருத்த வேலை

மேற்படி லொறி திருத்த வேலைக்கான அதற்குரிய முத்திரை இடப்பட்ட கூறுவிலைகள் 1983ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் தேதி காலை 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலை விபரம்: என்ஜின் கழற்றி பிஸ்ரன் சிலின்டர் மாற்றி கிறாங் வெட்டி படியப் பார்த்து திருத்தல்.

வேலை விபரம் II. மேற்படி வேலை சம்பந்தமான உதிரிப் பாகங்கள் பொருத்துதல்.

நிபந்தனைகள் I தேவையான உதிரிப் பாகங்கள் சங்கத்தால் விநியோகிக்கப்படும்.

நிபந்தனைகள் II மாற்றிய பின் பழைய உதிரிப் பாகங்கள் திருப்பித்தரப்படல் வேண்டும்.

நிபந்தனைகள் III என்ஜின் வேலை செய்து தந்தபின் எவ்வளவு கால எல்லை வரை இது சம்பந்தமான பிழைகள் ஏற்படாதென உறுதியளிக்கும் காலம் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்வி கூறுவிலை போடும் விண்ணப்பப் படிவங்களும், வேறு விபரங்களும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்
மானிப்பாய்

6495

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

விளம்பரம்

மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்
லொறி இல 24 ஸ்ரீ1036
திருத்த வேலை

மேற்படி லொறி முற்றாகத் திருத்துவதற்கான எமக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் 1983ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி காலை 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலை விபரம்:- புதிய கெற்போடுவதுடன் தேவையான ஏனைய உதிரிப் பாகங்களும் பொருத்தி என்ஜின் வேலைசெய்து திருத்தப்படவேண்டும்.

நிபந்தனைகள் I. சங்கத்தால் விநியோகிக்கப்படும் உதிரிப் பாகங்களே பொருத்தப்படவேண்டும்.

நிபந்தனைகள் II. மாற்றிய பின் பழைய உதிரிப் பாகங்கள் அத்தனையும் திருப்பித் தரப்படல் வேண்டும்.

நிபந்தனைகள் III. என்ஜின் வேலை செய்து தந்தபின் எவ்வளவு கால எல்லை வரை இது சம்பந்தமான பிழைகள் ஏற்படாதென உறுதியளிக்கும் காலம் குறிப்பிடப்படல் வேண்டும்.

வேறு விபரங்களும், கேள்வி கூறுவிலை போடும் விண்ணப்பப் படிவங்கள் அலுவலக நேரத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

6494

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சங்கானை கிழக்கு சூசைப்பிள்ளை யோன்ராசா பயஸ்] என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 138/T சூசைப்பிள்ளை யோன்ராசா பயஸ் கைம்பெண் ஸ்ரெலா ஜெயராணி பயஸ், தேவாலய வீதி, சங்கானை.

-மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு பங்குனி 16ந் நாளன்று முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாகத் தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

பதிவாளர்.

1983ம் ஆண்டு மாசி மாதம் 14ந் திகதியாகிய இன்று தேதி பிடப்பட்டது.

M K. சுப்பிரமணியம்,
மனுதாரின் சட்டத்தரணி.

6488

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ். பஸ் நிலையத்தில் மல சல கூடம், பண்டியன் தாழ்வு - அர்ச் சந்தன மாதா கோவில் வரை தடுப்புச் சுவர், சின்னக்காடு பள்ளி வாசல் முன்பாக அணைச்சுவர், கற்குளம் வீதி வடிகால் அமைக்கும் வேலைகளுக்கான

கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 24-03-83ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. யாழ். பஸ் நிலையத்தில் 14 அறைகள் கொண்ட மலசல கூடமும் சுற்று மதிலும்.
02. பண்டியன் தாழ்வு - அர்ச் சந்தன மாதா கோவில் வரை தடுப்புச்சுவர்.
03. சின்னக்காடு பள்ளிவாசல் முன்பாகவுள்ள அணைச் சுவர்.
04. கற்குளம் வீதி வடிகால்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 23-03-83ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விப்படிவக்கட்டணமாக ரூபா 50/-ம் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறுப்பாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

சீ. வி. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
07-03-83.

6490

அறிவித்தல்

அண்ணா கோப்பி ஸ்தாபனத்தாரின் விளம்பர வாகனத்தில்

12-3-83- மகாசிவராத்திரியன்று திருக்கேதீஸ்வரத்தில் எமது

தயாரிப்புப் பொருட்களைப்பெற்றுக் கொள்வதோடு பரிசுக் கூப்பன்களை சேகரித்து வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் கூப்பனில் உள்ள விபரப்படி பரிசுக் கூப்பன்களைக் கொடுத்துஇனாம் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அண்ணா தொழிலகம், இணுவில்

(6472)

"யாழ் மக்களுக்கு அரியதோர் சேவையை "குறோஸ் ட்ரவல்" ஸ்தாபனத்தார் அளிக்கின்றார்கள்"

பெல்ஜியம் விசாவுடன் பிரான்ஸ், இத்தாலி சுவிற்சலாந்து ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளுடன், உலகின் சகல நாடுகளுக்கும் விமான, கப்பல் போக்குவரத்து ஒழுங்குகள். பிரயாணிகள் காசோலை, விசா போன்ற வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க:
"CROSS TRAVEL SERVICE"

"குறோஸ் ட்ரவல் சேவிஸ்"

இல. 5, 2-வது தொடர் மாடி,
நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22040, 22065 [6480]

புதிய

"லக்ஸ்பிறே"

இந்நாட்டில் எல்லோரும் விரும்பி சுவைக்கும் பால் உணவு இப்பொழுது புதிய அழகான 500 கிறாம் பக்கற்றுகளில் அடைக்கப்படுகிறது.

வியாபாரிகளே!

உங்கள் தேவையை நாம் உடனே பூர்த்தி செய்யத் தயாராக இருக்கிறோம்.

யாழ், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உத்தரவு பெற்ற விநியோகத்தர்கள்:

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்,

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22134, 23819

★ வளைகுடாயுத்தத்தை நிறுத்த

கியூபா, இந்திய, இலங்கைத் தலைவர்கள்

அடங்கிய குழுவொன்று அமைக்கவேண்டும்!

-- ஈராக் பிரதிநிதி யோசனை

புதுடில்லி, மார்ச். 10

"ஈரான்-ஈராக் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் அந்த ஏற்பாடுகளைக் கவனிக்க இந்தியப் பிரதமர், கியூபா ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதி ஆகிய மூவரும் அடங்கிய குழுவொன்று அமைக்கப்படவேண்டும்,"

இவ்வாறு ஈராக்கியப் பிரதிநிதியான தாஹாமொஹிதீன் தெரிவித்தார். அணிசேரா மாநாட்டின் நேற்றைய கூட்டத்தொடரில் அவர் உரையாற்றினார், அவர் மேலும் கூறியதாவது. "வளைகுடா யுத்தம் (ஈரான்-ஈராக்) கடந்த 30 மாதங்களாக நடைபெற்று வருகின்றது. இப்போர் காலதாமதமின்றி நிறுத்தப்பட வேண்டுமென்பதனையே ஈராக் விரும்புகின்றது.

எனவே கியூபா, இந்தியா இலங்கை ஆகிய மூன்று நாடுகளையும் சேர்ந்த தலைவர்கள் அடங்கிய குழுவொன்று இப்போர் நிறுத்தத்துக்கான ஒழுங்குகளைக் கவனிக்க அமைக்கப்பட வேண்டும். அணிசேரா இயக்கத்தின் சார்பில் அமைக்கப்படும் அக்குழு தெஹ்ரானையும், பாக்தாத்தையும் கட்டுப்படுத்தும் வல்லமையுடையதாக இருத்தல் வேண்டும்.

அக்குழு வளைகுடா யுத்தத்தை நிறுத்துவதற்குத் தெரிவிக்கும் யோசனைகளை ஈராக்-ஈரான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளாமல் இவற்றில் ஏதாவது ஒன்று மறுப்புத் தெரிவித்தால், உடனடியாகமறுப்புத்தெரிவிக்கும் நாடு அணிசேரா இயக்கத்திலிருந்து நீக்கப்படவேண்டும்" என்றார்.

ஈராக் பிரதிநிதி மேற்கண்டவாறு தெரிவித்த யோசனைகள் வளைகுடா யுத்தநிறுத்தம் பற்றி மேலும் விரிவான நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்பளித்துள்ளன என்று அணிசேரா இயக்க அரசியல் கமிட்டிகள் தெரிவித்தன.

ஈராக் பிரதிநிதிதமது உரையில் இறுதியாக அடுத்த எட்டாவது அணிசேரா உச்சி மகாநாடு தமது நாட்டிலேயே நடத்தப்பட வேண்டுமென்றும் அதற்கான சூழ்நிலைவிரைவில் உருவாகுமென்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

ஈரான் பிரதிநிதி இந்த மகாநாட்டில் உரையாற்றுகையில் வளைகுடா யுத்தத்தை நிறுத்தும் எண்ணம் தமது நாட்டுக்கில்லையென்றும் வெற்றி கிட்டும் வரை தமது நாடு வளைகுடா யுத்தத்தைத் தொடரும் என்றும் கூறினார். [கி]

ஒரு லண்டன் நாயின் வேலை!

லண்டன், மார்ச் 10

லண்டன் நகரைச் சேர்ந்த திருமதி ஹெலன் ரோபொதம் என்ற 74வயது வயோதிப மாதுக்கு அவரது சிநேகிதி ஒருவர் போன் செய்தார்!

என்ன ஆச்சரியம்? அவருக்கு மறுபக்கத்திலிருந்து உறுமல் சத்தமும், குரைப்புமே பதிலாகக் கிடைத்தன! இந்த விசித்திர ஓசைகளைகேட்டவர் தமது கிநேகிதிக்கு ஏதும் இக்கட்டானநிலை ஏற்பட்டிருக்கவேண்டும். கள்வர்கள் யாராவது அவரது வீட்டிலிருந்து அப்படிக் குரல் கொடுத்திருப்பார்கள். அல்லது தமது நண்பி ஏதும் சுகயீனம் காரணமாக அவ்வாறு நடந்துகொண்டிருப்பார் என்ற முடிவுக்குவந்தார்!

உடனே பொலிஸுக்கு தகவல் கொடுத்தார். பொலிஸ்காரர்கள் திருமதி ஹெலன் ரோபொதத்தின் வீட்டை அடைந்தன உள்ளேயிருந்து திருமதி ஹெலன் "என்ன விஷயம்?" என்றபடி பொலிஸாரை நோக்கி வந்தார்.

பொலிஸாரும் "உங்களுக்கு ஏதாவது சங்கடமேற்பட்டதா?" என்றனர் அதற்கு அவர் 'இல்லை' இப்போதான் நான் கடையிலிருந்து திரும்பினேன் என்றார்.

"உங்களுக்கு ஒருவர் போன் செய்தாராம். ஆனால் அவருக்கு உறுமலும், குரைப்புச்சத்தமுமே பதிலாகக் கிடைத்தது என்று எம்மிடம் தெரிவித்து உங்களுக்கு விபரீதம் எதுவும் ஏற்பட்டதா என்று அறியும்படி அவர்பணித்தார்" என்றனர் பொலிஸார்.

இதற்கு திருமதி ஹெலன் சிரித்தவாறே ஓ அதுவா? அது என் ஹீக்கின் வேலை என்று கூறி தமது நாயைக் காண்பித்தாராம். கூடவே தாம் வீட்டிலில்லாதவேளையில் தொலைபேசி ஒலித்துக்கொண்டிருந்தால் அதனை எடுத்து பதிலளிக்க அந்த ஹீக்குக்கு தாம் பழக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தாராம்! (கி)

காஷ்மீர் விவகாரம் பற்றி பாக் அதிபர் பிரஸ்தாபம்!

புதுடில்லி, மார்ச், 10

அணிசேரா மகா நாட்டில் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாஉல் ஹக் இந்திய-பாக். சர்ச்சைக்குரிய காஷ்மீர் விவகாரம்பற்றியும் பிரஸ்தாபித்தார்.

அவ்வாறு அவர் பிரஸ்தாபித்ததுபற்றி இந்திய அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில், "காஷ்மீர் விவகாரம் பற்றிக் கருத்து வெளியிட பாகிஸ்தானுக்குப் பூரண உரிமையுண்டு. ஆனால் பாக்கிஸ்தான் அது கைப்பற்றிய காஷ்மீர் பிரதேசத்தின் ஒரு பகுதியை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்கவேண்டும்" என்றார்

பாக்கிஸ்தான் பத்திரிகை ஒன்று மகாநாட்டில் செய்தியாளர்களுக்கான வசதிகள் மிகக் குறைவாக இருந்தன என்று விமர்சித்திருந்தது இது பற்றி அந்த அதிகாரி தெரிவிக்கையில், அந்த விமர்சனம் தவறானதென்றும், இந்தியா மிகக் குறுகிய காலத்தில் சிறந்த வசதிகளைச் செய்தியாளருக்கு வழங்கியது என்றும் கூறினார். (கி)

சர்வதேச மகளிர் தினம்

லண்டன், மார்ச், 8

சர்வதேச மகளிர் தினம் உலகநாடுகள் பலவற்றில் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

ஜெனீவாவில் இத்தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்ச்சிகள் பல ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன

சுவீடனில் பெண்கள் விபசாரத் தொழிலுக்கு ஆட்சேபம் தெரிவித்து ஊர்வபமொன்றை நடத்தினர்.

ரோம் நகரில் பெண்களின் சம உரிமை குறித்து பொதுக் கூட்டமொன்றில் வலியுறுத்தப்பட்டது.

அணிசேரா இயக்க மகளிர் அணியினரும் இத்தினத்தைப் புதுடில்லியில் கொண்டாடினர். [கி]

உயரப்புலம் உத்துங்க விநாயகர் வழிபடுவோர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 18 ஆண்டுகளாகக் ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் பிரதம குருவாகப் பணியாற்றிய சிவஸ்ரீ குகதாசக்குருக்களைகோவில் நிர்வாகம் வேலை நீக்கம் செய்துள்ளதை இவ்வாலயத்தின் வழிபடுவோர்கள் ஆட்சேபித்துள்ளார்கள்.

இவரை மீண்டும் வேலைக்கு அமர்த்த வேண்டுமென்றும் வழிபடுவோர்கள் கையொப்பமிட்டுப் பரிபாலன சபைக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

பிறிதொரு கிராமத்துக்கோவில் ஒன்றில் கொடியேற்றக் கிரியை நிறைவேற்றிய குற்றச்சாட்டின் பேரிலேயே பிரஸ்தாப ஆலயக்குரு வேலைநீக்கம் செய்யப்பட்டாராம்.

அணிசேரா உச்சிமாநாடு

அணிசேரா அரசியல் கமிட்டி

வெளிச்சக்திகளை ஆப்கானிலிருந்து வெளியேறக் கோரும் தீர்மானம்!

புதுடில்லி, மார்ச். 10

அணிசேரா இயக்க நாடு அரசியல் கமிட்டிகள் ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக அரசியல் ரீதியான தீர்மானமொன்றை எடுத்துள்ளனவென்று தெரிவிக்கப்பட்டது.

அத்தீர்மானத்தில் ஆப்கானிஸ்தானில் இருந்து சகல வெளிநாட்டுச் சக்திகளும் உடனடியாக வெளியேற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆப்கானிஸ்தானில் தற்போது நிலைகொண்டுள்ள சோவியத்துருப்புகள் குறித்து குறிப்பாக எதனையும் அத்தீர்மானம் கொண்டிருக்கவில்லை.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது ஆரம்ப தலைமையுரையில் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புகள் வெளியேறுமென்றும் நம்பிக்கை தெரிவித்திருந்தார் என்பது தெரிந்ததே.

ஆப்கானிஸ்தானில் நிலவும் பதட்டநிலை காரணமாக அங்கிருந்தும் சுமார் 40லட்சம் மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளான பாகிஸ்தானுக்கும் ஈரானுக்கும் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சோவியத்துருப்புகள் 1980ம் ஆண்டில் ஆப்கானிஸ்தானுள் புகுந்தன அன்றிலிருந்து ஆயிரக்கணக்கில் அவை தொடர்ந்தும் அங்கிருந்து வருகின்றன. இத்துருப்புகளுடன் தீவிரஆப்கான் வாசிகள் கொரில்லா பாணியில்தாக்குதல்களைநடத்திவருகின்றனர்

இத்தீவிரவாதிகளைஎதிர்த்து சோவியத் துருப்புகள் பயங்கர ஆயுதங்களையும், இரசாயன ஆயுதங்களையும் பிரயோகித்து வருகின்றனவென்று செய்தி நிறுவனங்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன. (கி)

ஜே. ஆருக்கு இந்திய பத்திரிகைகள் பாராட்டு!

புதுடில்லி, மார்ச். 10

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் அணிசேரா மகாநாட்டு உரையைப் பாராட்டி இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன

ஜனாதிபதி ஜயவர்த்தனா தமது உரையில் அரசியல் பிரச்னைகளைத் தவிர்த்து பொருளாதாரப் பிரச்னைகளுக்கே அணிசேரா இயக்கம் முக்கியம் கொடுக்க வேண்டுமென வற்புறுத்தியிருந்தார்.

அவர் மேலும், அணிசேரா நாடுகள் தமது தொழில் நுட்பகைத்தொழில் வளர்ச்சி கருதி கைத்தொழில் நாடுகளுடன் பேச்சுக்களை நடத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார். (கி)

நீர்வை

அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் சிவராத்திரிவிழா

(நீர்வேலி)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலில் நாளை சனிக்கிழமை சிவராத்திரிவிழா கொண்டாடப்படுகிறது.

பண்டிதை திருமதி சத்திய தேவி துரைசிங்கம், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், கோப்பாய் கந்தவேள் வித்தியாசாலை அதிபர் திரு. அ. சுப்பிரமணியம் ஆகியோர் உரைநிகழ்த்துவர். பிரம்மஸ்ரீ கா. சாமபசிவக்குருக்கள் ஆகியுரை வழங்குவார். திரு. வ. நடராசா - பிள்ளையார் தோத்திரம்.

வடகோவைச் சகோதரிகளின் இசைநிகழ்ச்சியும் இடம்பெறும். (அ)

ஜீப் மோதி காயமுற்றார்

(மாவிட்டபுரம்)

கடமை முடிந்து வீடு திரும்பிய சீமந்து தொழிற்சாலை லிகிதரான பெண்மணியொருவர் வீதியால் வந்த இராணுவ ஜீப்பால் மோதப்பட்டு காயமடைந்தார்.

காங்கேசன்துறை சீமந்து தொழிற்சாலை விற்பனவுப் பகுதியில் லிகிதராக கடமை புரியும் காங்கேசன்துறையைச் சேர்ந்த மேற்படி பெண்மணி தமது கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் வீதியால் வந்த இராணுவ ஜீப் ஒன்று அவரை மோதி விடவே அவர் தூக்கி வீசப்பட்டார்.

வீதியால் வந்த மினிபஸ் ஒன்றை மேற்படி இராணுவ ஜீப் விலத்திச்சென்ற சமயமே இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

[7-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

உலகம் ஐரோப்பாவிலும் பார்க்க மிகப் பெரியது; உலகப் பிரச்னைகள் எல்லாம் ஐரோப்பிய பிரச்னைகள் என்று கருதினால் உலக சமாதானம் உதயமாகாது. ராணுவசக்தியிலும் மிகப்பெரிய இன்னொரு சக்தி உண்டு. இதுவே எனது குருநாதர் எனக்குக் கற்பித்தது. இதனை வெளிப்படுத்துவது ஆசியாவின் இன்றைய பொறுப்பு. நாளை இது இன்னும் அதிகரிக்கும்.

—ஐ. நா. வில் நேரு

நமது நோக்கு

பட்ஜெட் விமர்சனம்

நேற்று ஆரம்பமான பட்ஜெட் விவாதம் ஏழு நாட்களுக்குத் தொடருமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வழக்கமான நடவடிக்கைஎன்றபோதும், இவ்வாண்டு ஏழு நாட்களுக்கு கருத்துப் பரிமாற என்ன இருக்கிறதென்ற கேள்வி எழத்தான் செய்யும்.

மற்றைய விடயம்மிகவிபரீதமானது. அரசாங்க சார்பில் வரவு-செலவுத் திட்டத்தின் குணத்தையெடுத்துரைக்கப் பல புலவர்கள் உண்டு; ஏற்றுமதிக்கு எங்கள் நாடு பெயர் பெற்றதைத்த ஆடைகள் போல, பலர்-பல அமைச்சர்கள் கூட தங்கள் திறந்த பொருளாதாரம் பற்றித் தாராளமான 'றெடிமேட்'பேருரைகள் நிகழ்த்துவார்கள்.

'பயங்கர'தொகையாகிய 2800 கோடி துண்டுவிழுகிறதே என்ற அச்சம் அவர்களுக்கு ஏக்கம் ஏற்படுத்துவதில்லை; வடபகுதியின் 'பயங்கரவாதம்' வேறுவிடயம்.

எம்மைப் பொறுத்தளவில்இரண்டுக்கும்தொடர்பு காணுந் திறமையில் நாட்டின் பொருளாதார சுதந்திரம் மட்டுமல்ல அரசியல் சுதந்திரமே தங்கி நிற்கின்றது. நாட்டில் அமைதி நிலவ பொருளாதாரச் சீர்கேடு தன் வலியே நீங்கி விடும்.

எதிர்க்கட்சியினருக்கு இந்தக் கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் பொறுப்புண்டு. ஆனால் எதிர்க்கட்சி எங்கே! நாட்டின் ஜனநாயகம் எங்கே? நாடு கடத்தப்பட்டு விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சித்தலைமை தாங்குகிறதே என்ற அச்சம் அரசுக்கு அதிகரித்து வருகிறதாகத் தெரிகிறது.

பலமுடைய எதிர்க்கட்சியை அரசு உண்மையில் விரும்புகிறதா என்பது சந்தேகம்; உலகத்துக்கு ஒப்படைக்க பேருக்காவது ஒன்று வேண்டும்; அது ஆக்க பூர்வமான தொன்றாயிருக்கவேண்டும். அரசின் குறைகளை அதிகம் பலப்படுத்தாமல், அடிக்கடி "ஆமா"ச் சொல்லக்கூடிய ஒன்று உருவாக்கும் திட்டமிருப்பது போல் தெரிகிறது.

இன்றைய விவாதத்தில் ஆட்பலம் குறைந்த எதிர்க்கட்சியானாலும் பட்ஜெட் விமர்சனப் பீரங்கிக்கு (துப்பாக்கி அல்ல) போதியமருந்துண்டு.

கம்பீரமான அழகொழுகும் புதிய பாராளுமன்ற மண்டபத்துக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாத வண்ணம் இந்த வரவுசெலவுத் திட்டத்துக்குத்தக்க தகனக் கிரியைகள் நடத்துவது மிக அவசியம்.

கோடானு கோடி ரூபா இலங்கை மக்களின் நாணயத்தைப் பணயம் வைத்து கடனாகப்பெற்றுக்கொண்ட அரசு, தானே ஒப்புக்கொண்ட அளவில். நிதி மோசடி, விரயம், ஊழல், ஆடம்பரவாழ்வு, நிர்வாகச் சீர்கேடு, தந்த உழைப்பின்மை போன்ற சீர்கேடுகளை மகாவலி நீரில் அஸ்திதியாகக்கரைத்துவிடுகிறது.

இந்த பட்ஜெட்டை சபைக்குச் சமர்ப்பிக்க நிதி அமைச்சருக்கு என்று மில்லாத துணிவு வேண்டியிருந்தது. இரு காரியங்கள் அதற்கு உதவின; ஒன்று: ஆறாவது பட்ஜெட்டை அடுத்தடுத்துத் தயாரிக்கும் பொறுப்பு ஒரே நிதிஅமைச்சருக்கிருந்த தனித்துவப் பெருமை. பாடம் கஷ்டமானாலும் பழைய பாடம்; மற்றது: பாடம் கேட்போர் நம்மாட்கள், பழைய பாராளுமன்றங்களில் கர்ச்சிக்கும் கருத்துடைய குரல்கள் இன்று அமர்ந்துவிட்டன.

அக்குவேறாக ஆணி வேறாகக் கிழித்துக்கையிலெடுத்து கண்ணாடியைக் கழற்றி ஊனக கண்ணால் நேரில் எவரும் பார்த்து விபரங்களின் வெறுமையை விளங்கும் வண்ணம் கண்டனம் எழுப்பும் டாக்டர் எள். எம்., பீற்றர் கெனமன், டாக்டர் கொல்வின், இன்னும் அமரர் ஜி. ஜி., இன்று அரசோடு ஒட்டி நிற்கும் டாக்டர் தகர, இன்றைய ஜனாதிபதிகூட விடிவிளக்கேற்றிப் படித்து கண்டனப் பாடங்களைச் சபைக்கு சமர்ப்பித்த கனவான்கள்.

இன்றைய வறுமை நிலையில் — அரசியல் வறுமை — நாடு பொருளாதார சுபீட்சம் காண்பதெப்படி?

நாமொரு ஆசிய நாடு; ஆசிய பண்பாடு, பாரத மரபு, என்ற பதங்கள் இன்றும் அர்த்தமுடையதாக காணப்படுவதற்கு ஆசிய 'ராட்சதர்களென்று செல்லமாக அழைக்கப்படும் இந்தியா, சீனா, ஜப்பான் முதன்மை பெற்றிருப்பது காரணமாகும்.

இம் மூன்று நாடுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்த போதும், மனித பண்பாட்டுக்கு அதன் வளர்ச்சிக்கு, அத்திபாரமாகக் கொண்ட ஆத்மீக லட்சியத்தில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளன; அதில் ஒற்றுமை கொண்டுள்ளன.

"ஒரு புதிய உலக சமுதாயத்தை உருவாக்க முயலுவோமானால், ஒரு புதிய மனிதனை புனரமைக்க வேண்டும்" என்ற ஆலோசனையை யூனெஸ்கோவிற்குத் தெரிவித்திருந்தார் இந்திய தத்துவ மேதையும் முன்னைநாள் ஜனாதிபதியுமான காலஞ்சென்ற சேர் சர்வபள்ளி ராதா கிருஷ்ணன்.

அந்தப் புதிய மனிதன் யார்? என்பதை விளக்குவது இலேசல்ல; ஆனால் அவர் யாரல்ல என்பதை இன்றைய இலங்கை பட்ஜெட் நன்றாக விளக்குகிறது; "எங்கள் வருவாய் உல்லாசத்துறையில் அதிகரித்து வருகிறது; இரத்தினக் கல் வியாபாரம்(கடத்தல்அல்ல) நல்ல பலனளிக்கிறது; தைத்த ஆடை ஏற்றுமதியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது; வெளிநாட்டு உழைப்பால் கிடைக்கும் வருமானம் நாடகப் பாங்கில் பெருகியிருக்கிறது. உள் நாட்டில் வேலை வாய்ப்பு அதிகரித்திருக்கிறது.

இப்பெருந்தொகை கடனுள்ள ஒரு நாடு, இன்று பாராட்டும் வருமானத் துறைகளைப் பார்த்தால் நாட்டை வழி நடத்த, ஆற்றல், தன்னம்பிக்கை தார்மீகப் பண்புபெற்ற மக்கள் என்றும் உருவாக முடியுமென்று நம்பலாமா?

ஆசிய ஆத்மீகப் பண்புக்குரிய லட்சியங்கள், பட்ஜெட்டுக்கு நடக்கவிருக்கும் பரிகாரத்துக்கு, அவசிய தேவையென நிதி அமைச்சர் பட்டியலிட்டிருக்கிறார்.

சேட இழுப்பு ஆரம்பமான நிலையில், காய்ச்சலுக்குரிய கக்ஷாயம் தயாராக்கும் போக்கை ஒத்தசெயல்இது.

மனிதனைப் புனரமைப்பதே இன்றைய பட்ஜெட்டின் பெரு நோக்கமாக வேண்டும்.

சிவனருள் பெறுவதற்கு உத்தம காலம் சிவராத்திரி

(நாளையதினம் 12-ம் திகதி திருக்கேதீஸ்வரத்தில்சிவராத்திரி அனுஷ்டிக்கப்படுகின்றது)

செங்கண்ணானும் பிரமனும் தம்முள்ளே எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார் இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான். பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே- என்பது அப்பர் வாக்கு.

சிவபெருமான் சோதிலிங்கமாகத் தோன்றிய தினமே மகா சிவராத்திரி தினம் எனப்படுகின்றது. தன் படைப்பாற்றலை வியந்த பிரமதேவரும் தன் காத்தலின் பெருமையையே மதித்த திருமாலும் பலப்பரீட்சை செய்யும் விதத்தில் யுத்தம் நிகழ்த்தினர். அதனால் உலகெங்கும் அவதிப்பட்டது. வல்லரசுகளின் போட்டியில் அகப்பட்டு, தவிக்கும் உலக நாடுகள்போல உலகைப் பிரமவிட்டுணுக்களின்யுத்த பீதியிலிருந்து சாக்கவும், அவர்களுக்கு நல்ல புத்தியுண்டாக்கவுமே சிவபெருமான் ஆதியும் அந்தமும் அற்ற அரும்பெரும் சோதிலிங்கமாகத் தோன்றினார் சோதிலிங்கத்தின் அடிமுடி தேடிக்களைத்த பிரமவிட்டுணுக்கள் சோதிலிங்கத்தில் மைக்களமும் [நீலகண்டமும்] நாற்புயமும் மதிச்சடையும் சேயிழையோர் பாகமுமான சிவனைத்தரிசித்து நல்லறிவு பெற்றனர். அத்தினத்தில் சிவவழிபாடும் செய்வது மிக கட்டாயமானதாகும் "இச்சிவராத்திரி விரதஞ் சைவசமயிகள் யாவராலும் அவசியம் அனுட்டிக்கத் தக்கது" என்று நாவலர் வலியுறுத்தியுள்ளார்.

"பருவத்தே பயிர் செய்" என்பதையும், "பருமரங்களானாலும் பருவத்தாலன்றிப் பழா" என்பதையும் எல்லோரும் அறிவர், பயிர் செய்வதற்கும் மரங்கள் பழுத்துப் பயன் தருவதற்கும் காலம்

- தி. பொன்னம்பலவாணர் -

விரதமனுட்டித்தும் பூசை செய்தும் சிவனருள் பெற்றவர் அனேகர்-

நித்திய பட்டினியாக வாழ்வோர் பண்டிகைக் காலங்களில் சுவைமிகுந்தவைத் உண்டல் போலவும், கந்தல் போன்ற உடையே அணிபவர் தீபாவளியன்றாவது கோடி உடுக்கவே முயலுதல் போலவும் சைவசமயிகள் மகாசிவராத்திரி தினத்தில் விரதமும் பிரதானமாதல் போன்று சிவனருள் பெறுவதற்குமிகவாய்ப்பான உத்தமோத்தம புண்ணிய காலம் சிவராத்திரியேயாகும்.

சுகவாழ்வாகிய அன்புவாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் கூட அன்பு வாழ்வுக்கு காலமும் இடமுப் முதற்காரணங்கள் என்றுகூறியுள்ளார். அன்பு வாழ்வுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி:

கேரதீவு படகு, பஸ்சேவை அதிகரிப்பு; வீடுகள்சீரமைப்பு

[மன்னார்]

திருக்கேதீஸ்வரத்தில் மகா சிவராத்திரி விழாவிற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன.

மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு சங்குப்பிட்டி— மன்னார் பிரதான வீதி செப்பனிடப்பட்டுள்ளது.

சங்குப்பிட்டிக்கும் பூநகரி தபால்நிலையத்திற்குமிடையில் தற்காலிக தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சங்குப்பிட்டிக்கும் திருக்கேதீஸ்வரத்திற்குமிடையில் இன்று வெள்ளிமுதல் 10 மேலதிக பஸ்வண்டிகள்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதேபோல் கேரதீவுக்கும் சங்குப்பிட்டிக்குமிடையில் மேலதிக படகுச் சேவைகளும் நடத்தப்பட்டுவருகின்றன.

யாழ்பாணம், காரைநகர், பருத்தித்துறை, முல்லைத்தீவு, வவனியா போன்றதூர இடங்களுக்கான பஸ்சேவைகளும் ரயில் இணைப்பு பஸ்சேவைகளும் நடத்தப்படும்.

விசேஷ ரயில்சேவைகளும் திருக்கேதீஸ்வரம் வரை நடத்தப்படும்.

மகாசிவராத்திரி விழாவின் போது திருக்கேதீஸ்வரத்திற்கு வரும் யாத்திரீகர்களுக்கு திருக்கேதீஸ்வரம் ரயில்நிலை சத்தினருகில்வைத்து ரயில்வே திணைக்களத்தினரால் அன்னதானம் வழங்கப்படும்.

இத்துடன் திருக்கேதீஸ்வரத்திலுள்ள சகல மடங்களிலும் யாத்திரீகர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையின் மன்னார் சாலை ஊழியர்களினாலும், மன்னார் கட்டிடத்திணைக்களம் இலுப்பைக்கடவை இந்து இளைஞர் மன்றம் ஆகியவற்றினாலும் தண்ணீர்ப்பந்தல்கள் நடத்தப்படும்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்படுவதுடன் ஆலயச்சுற்றாடலில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தவக்கால நற்சிந்தனை

கடவுளுக்கன்பு செய்வோம்

'உன்கடவுளாகிய ஆண்டவர்க்கு உன்முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும், முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக' —இதுவே முதற்கட்டளை.

'அன்பே கடவுள். அன்பில் நிலைத்திருப்பவன் கடவுளுக்குள் நிலைத்திருக்கிறான். கடவுளும் அவனுள் நிலைத்திருக்கிறார்,'

கண்ணால் காணாத கடவுளை அன்பு செய்வதற்கு முன் நாம் கண்ணால் காணும் சகோதரனை அன்பு செய்ய வேண்டும் — அப்போதுதான் நம் அன்பு எல்லோருக்கும் பயன் கொடுத்து எல்லோரிலும்பரவும்,

அருட்செல்வன் ம. ரூபன்

மக்கள் கருத்து

சந்தானம் வழங்கிய சங்கீத மழை

நீண்ட நாட்களின் பின் ஒரு அருமையான சங்கீதக் கச்சேரி கேட்டும் வாய்ப்பு இசைப் பிரியர்களுக்குக் கிடைத்தது: கடந்த 5-3-83 சனிக்கிழமையன்று றிம்மர் மண்டபத்தில் இசைப் பேரறிஞர் மஹாராஜபுரம் சந்தானம் அவர்களது இன்னிசைக் கச்சேரி இடம் பெற்றது. தெரிந்து எடுத்த ரஸிகர் கூட்டம் மண்டபம் முழுவதும் நிறைந்திருந்தது. மனோரம்மியமான சூழலில் மக்கள் மனத்தை ஈர்க்கக் கூடிய வகையில் கச்சேரி ஆரம்பமானது. 'என்ன அருமையான இசை' என்று அனைவரும் அதற்கு கட்டுண்டு விட்டனர். மஹாராஜபுரம் சந்தானம் அவர்கள் வழங்கிய சங்கீத மழையில் சபையோர் எல்லோரும் அற நனைந்துவிட்டனர் என்று கூறினால் மிகையாகாது. சுருதி லயத்தோடு சுத்தமான சங்கீதம் கேட்டோம் என்ற திருப்தி அனைவர் முகத்திலும் தவழ்ந்தது.

[7ம் பக்கம் பார்க்க]

எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்

"கற்கக் கசடறக்
கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக"—

என்ற பொய்யாமொழியாரின் வாக்கை மெய்ப்பித்துக் காட்டிய அரிய பெரிய உள்ளம் அண்மையில் இறையடி சேர்ந்துவிட்டது. அவ்வுள்ளத்திற்கு உரியவர் வேறு யாருமிலர்; அவர்தான் செல்வி இவான்ஞலின் கிருபை மதியாபரணம்.

சேவைச் சிறப்பு, சமூகப் பணி, அறிவுக்கொடை, சலியா உழைப்பு, இரக்க மனப்பான்மை, மதப்பற்று, மனிதரில் இறைவனைக் காணும் அரிய பண்புகளை உள்ளடக்கி, காட்சிக்கெளிய தோற்ற அமைப்பும், இன்முகங் காட்டி வருவிருந்தோம்பும் அரும் பெருந்தகையை இழந்து கையறு நிலையில் நிற்கும் எங்கள் பரிதாபத்தை என்னென்று எடுத்துரைப்பேன்.

அவர் 1936ம் ஆண்டு தொடக்கம் 1965ம் ஆண்டு வரை அதிபராகக் கடமையாற்றியுள்ளார். மனதத்துவ நிபுணத்துவம் அவரின் ஆற்றலை உயர்த்தி கல்விச் சேவையில் நற்பெயரை அளித்தது.

தாகூர் பெரியாரின் இலட்சியமாம் அகத்தூய்மையும் பற எளிமையும் அன்னாரின் வாழ்க்கையில் என்றும் காணக்கூடியதாக அமைந்திருந்தன.

சிலப்பதிகாரத்தின் கருப்பொருளை உணர்த்தவந்த ஆசிரியர் இளங்கோவடிகள்—

"அரசியல் பிழைத்தோர்க்
கறங் கூற்றாவதுவும்
உரைசால் பத்தினியை
உயர்த்தோர் ஏற்றலும்
ஊழ்வினை உறுத்துவந்து
ஊட்டும் என்பதுவும்
சூழ்வினைச் சிலம்பின்
காரணமாக நாட்டுதும்
யாமோர் பாட்டுடைச்
செய்யுள்"

என்று அழகுற உணர்த்தியவாறே பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியை ஊழ்வழி உயர்த்தி அறவழி அதிபராக அரசோச்சி உலகத்தோர் கல்வி கேள்விகளில் உயரும்பொருட்டு அயராது நல்லாசிரியச் சேவை புரிந்து நன் மக்கள் பலரைச் சமூகத்துக்குச் சமைத்துக் கொடுத்த உரைசால் பத்தினியாகிய அவர் வாழ்ந்து காட்டிய சிறப்பு வருங்கால சமூகத்தவர் பின்பற்றவேண்டிய ஒரு சிறப்பாகும்.

அன்னாரின் அன்புள்ளம் அதிகாரத்தையும் வெல்லும் தன்மையது. அன்பானது அவரின் உடன் பிறப்புப்போல் எவரையும் ஈர்க்கும் விதத்தில் அமைந்திருந்தது. மாணவ மக்கள் மேல் கொண்ட காதலால் தன்னை இல்லறச் சிறையில் வாட்ட விரும்பாது, மாணவ சமுதாயத்தின் நாட்டத்தினால் அன்புத் தாயாகினார்.

தாயன்பு

ஏழ்மையால் சமுதாயத்தில் தாழ்மையுற்று நலிந்து வாடிய சிறார்களுக்கும், அனாதைக் குழந்தைகள் பலருக்கும் உண்மையான தாயன்பைச் சொரிந்து மக்கள் அன்பே மகேசன் அன்பு என்ற இலக்கணவரையை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வரலாற்று இலக்கியம் படைத்த மேதையானார்.

அவரின் ஆற்றல்

அவரின் ஆற்றல் வகுப்பில் பாடங்களை நன்கு விளக்கும் போது குன்றின் மேற்றீபம் போல் பிரகாசிக்கும். சரித்திரப் பாடமானாலும், ஆங்கிலப் பாடமானாலும் மாணவர் சலிப்படையாத வகையில் திறம்பட விளக்கும் விரிவுரைகள் இன்றும் நினைவில் மிளிர்கின்றன. மாணவரின் அன்றாடத் தேவைகளை உணரும் ஆசிரியையாக மட்டுமன்றி அவர்களின் ஆற்றலை எவ்வழிகளில் ஊக்குவிக்க முடியுமென்ற முறைகளை உணர்ந்து அவற்றை மிகத்திறம்பட வெளிக்கொணர ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அதனால்தான் அவர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அக்கல்லூரி யாழ்ப்பாணத்தில் ஒரு சிறக்த நிலையை எய்தியதுபோலும்.

ஒழுக்கத்தைக் கண்ணெனக் கருதி மாணவ சமுதாயத்தைக் கட்டி எழுப்பிய பெருமையும் அவரையே சாரும். காந்தி மகான் கூறியதுபோல் கல்வியின் பெருமை ஒழுக்கத்தின் தன்மையைப் பொறுத்தே உயர்வடைகின்றது. ஒழுக்கமற்ற கல்வித் தேர்ச்சிகள் பயனற்றவை; பயனற்றவை. சமுதாயச் சிறப்பும் வளர்ச்சியும் ஒழுக்க வழியில் எய்திய அறிவுச் செல்வத்தைப் பொறுத்ததேயாகும். ஆகவே தான் ஒழுக்கத்தின் காவலராக மிகவும் கண்டிப்பான முறையில் அதிகாரத்தை அன்பு செலுத்தி கல்வியின் நோக்கத்தில் வெற்றியையும் ஈட்டிய பெருமைக்கும் உரித்தானவராகின்றார்.

தற்புகழ்ச்சி அற்றவர்

தன் நம்பிக்கை மிக்கவர், ஆனால் தற்புகழ்ச்சி அற்றவர் தன்னை மற்றவர்கள் புகழ வேண்டும் என்பதற்காக எக்காரியத்திலும் ஈடுபடமாட்டார். எச்செயலால் மாணவ சமுதாயம் உயர்கின்றது. கல்வி நன்னிலை அடைகின்றது. நாடு நலம் பெறுகின்றது. வாழ்வின் நோக்கம் ஈடேற்றப்படுகின்றது என்பவற்றை ஆற அமர ஆராய்ந்து அதன் வழி தன் அபிலாஷைகளை எடுத்துச் செல்லும் ஆற்றல் மிக்கவர்.

தாய்க் குலத்திற்கே உரிய அரிய பண்புகளாகிய அடக்கம் அமைதி அவரிடம் குடிகொண்டிருந்ததன்பொருட்டே அவர் எல்லாச் சிறப்புகளுக்கும் உரித்தானவராகின்றார்.

ஓய்வு காலங்களிலும் சரி அவர் சமுதாய நன்மைகளுக்காகவே தன்னை அர்ப்பணித்தவர். எவ்வகையிலேனும் தான் சமுதாயத்திற்குபாரமற்றவராகவே அறவழிவாழ்ந்து தன்னை நாடி வந்தவர்களுக்கு எவ்வகையில் உதவ முடியுமோ அவ்வகையில் உதவிகளை ஆற்றியவர்

நோயுற்றகாலும் தன்னலம் சிறிதும் இல்லாது அவரைப் பார்க்கப் போகும்யாவரையும் இன் முகத்துடன் வரவேற்று அவர்கள் நலன்களைப்பற்றியே விசாரித்துக்கொண்டிருந்தார்.

"அண்டஞ் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை பிண்டஞ் சுருங்கில் பிராணன் நிலைபெறும் உண்டி சுருங்கில் உபாயம் பலவுள கண்டங்கறுத்த கபாலியு மாமே" என்ற திருமூலரின் திருமந்திரக் கோட்பாட்டின் படி அன்னார் தன்னை உணர்ந்தார். தலைவனாகிய இறைவனை உணர்ந்தார். ஈற்றில் பெப்ரவரி 2ம் நாள் மாலை 4-20 மணிக்கு முகத்தில் புன்னகை பொலியத் தன்னை இறைவன் பாதம் சேர்ந்தார்.

திருமதி சறோஜினி
உரோமகேசுவரன்
(பழைய மாணவி)

புங்குடுதீவின் வடகரையில் பிரதான வீதியில் இருந்து பாணாவிடை சிவன் தேவஸ்தானம் வரை ஒன்றரை மைல் தூரத்திற்கு 12 அடி அகலத்தில் அணைப்பாதை அமைக்கும் புங்குடுதீவு இளம் தமிழர் மன்றத்தின் சிரமதானப்பணியை சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் மண்ணை வெட்டிக் கையளித்து ஆரம்பித்து வைப்பதையும் பொது இயக்கங்களின் பிரதிநிதிகள் பலம்சூழ நிற்பதையும், சிரமதானிகள் வேலை செய்வதையும் படங்களில் காணலாம்.

சிவனருள் பெறுவதற்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முதற்காரணமான காலம் அன்பே வடிவாய் உள்ள சிவனை வணங்குதற்கும் சிவன் அருள்செய்தற்கும் உரிய தாய் அமையும் போது அது மகாசிவராத்திரி எனப்படுகின்றது.

சைவப் பேருலகிலேசிவராத்திரி தினத்தில் வழிபடுவதற்கு பல புண்ணியத்தலங்கள் உரிமையுடையனவாய் உள்ளன. இமயமலைச்சாரலாக உள்ள திருக்கேதாரம் முதல் காசி, காளத்தி, திரியம்பகம், இராமேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரமாகிய கீரிமலை என்பன போலப் பல தலங்கள் மகாசிவராத்திரி வழிபாட்டுத் தலங்களாம். கீரிமலை இராமேஸ்வரம் திருக்காளத்தி முதலிய தலங்களில் சிவராத்திரி நாளே தேர்த்திருவிழா அமையக்கூடியதாக மகோற்சவம் எனப்படும் பெருவிழாக்கள் நடைபெறும்.

திருக்கேதீஸ்வரப்பெருமான் பெருங்கருணையால் இன்று சிவராத்திரி என்றதுமே திருக்கேதீஸ்வரத்தை நினைக்கும் தன்மை ஏற்பட்டுள்ளது. திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி மடம் என்ற பெயரிலும் ஒருமடம் அமைந்திருந்துயாத்திரீகர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்துவருவதும் அங்கு திருப்பணிகள் நடைபெறுவதற்குதன் வாழ்வை அர்ப்பணித்த கந்தையா வைத்திய நாதன் திருக்கேதீஸ்வரத்தில் மகாசிவராத்திரிவிழா பெருஞ்சிறப்புடன் நடைபெறுவதற்கு உரிய வழிவகைகளைச் செய்ததும் சிவராத்திரிக் கடவுளாகிய சிவன் செயலாகவே வணங்கத்தக்கது.

சைவசமயிகளாக உள்ள அனைவரும் தம் இயல்பிற்கும் ஆற்றலுக்கும் தெய்வவிசுவாசத்திற்கும் ஏற்ப சிவராத்திரி விரதம் அனுட்டிக்க வேண்டும். நோய் வறுமை முதலிய காரணங்களால் உபவாசம், நித்திரை விழித்தல் என்பனவற்றைப் பூரணமாக அனுட்டிக்கும் பாக்கியமில்லாதவர்கள் சிவநாமங்களைச் சொல்லுதலும் லிங்கோற்பவ காலமாகிய இரவு பன்னிரண்டுமணிவரைவிழித்திருந்து சிவதரிசனம் செய்தலும் தலையாய கடமையாகக் கொள்ளுதலும் வேண்டும்.

குருவிடம் பஞ்சாட்சரோபதேசம் பெற்றவர் பஞ்சாட்சர செபம் செய்தலும், மற்றவர்கள் சிவநாமங்களைச் சொல்லுதலும் அவசியம். சிவநாமங்களைச் சொல்லுதல் இன்னருளைத் தரும் என்பதை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு பின்வரும் திருமந்திரம் உதவும்.

சிவசிவ என்றிடத் தீவினை மாளும் சிவசிவ என்றிடத் சிவகதி தானே. அரன்நாமமே சூழ வையகம் துயர் தீரும் என்பது சைவசமய ஆச்சாரியரான ஞானக்குழந்தையின் உறுதி மொழியாகும்.

பழை வீமன் காமம் கி.உ.சபைத்தலைவர்

பழை.வீமன் காமம் கிராமோதய சபைத் தலைவராக 'சமூகத் தொண்டன்' எஸ். ஆர். ஞானசுந்தரம் பலத்த போட்டியின் மத்தியில் தெரிவானார்.



பத்திரிகையாளரும், சமூக சேவையாளருமான இவர் பழை வீமன் காமம் பாவனையாளர் சங்கத் தலைவரும் வலி. வடக்குப் பாவனையாளர் சங்கங்களின் பிரதேச சபைச் செயலாளரும், அகில இலங்கை இசை வேளாளர் சங்கச் செயலாளரும், தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரும், கம்பன் கலைக்கழக செயலாளரும், மாங்கொல்லை இளைஞர் முன்னேற்ற மன்ற சனசமூக நிலைய உப தலைவரும், பழை கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளரும், கூத்தியாவத்தை சனசமூக நிலையப் செயலாளருமாவார்.

சங்கங்களில் கிராம வளர்ச்சிக்காக பல துறைகளிலும் இவர் சேவையாற்றி வருபவர் என்பதும் மாவை கிராம அபிவிருத்திச் சங்க விழாவில் முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் திரு லால் விஜயபாலாவினால் ஏற்கனவே 'சமூகத்தொண்டன்' என்றும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

சந்தானம்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மஹாராஜபுரம் சந்தானம் அவர்களது பாட்டுக்கு வி.கே. குமாரசாமி அவர்கள் வயலினும் ஏ. எஸ். இராமநாதன் அவர்கள் மிருதங்கமும் வாசித்தார்கள். இனிமையான இசை வெள்ளம் பரவுவதற்கு இவர்கள் வழிகோலிக் கொடுத்தார்கள். இன்பத்தை அள்ளி வழங்கும் இனிய சாஸ்திர ரீதியிலான சங்கீதக் கச்சேரியை ஏற்பாடு செய்து இசைப்பிரியர்களுக்கு இனிய விருந்தளித்த யாழ். நுண்கலை மன்றத்தினருக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டவர்களாவோம்.

இத்தகைய இசைக் கச்சேரிகள் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி நடைபெற வேண்டும். அப்போதுதான் பாரம் பரியமான கர்நாடக இசைக்கலை நம்மவரிடையே துளிர்விட்டு வளர வாய்ப்பேற்படும். இது போன்ற தூய்மையான இசைக் கச்சேரிகளை ஈழமண்ணில் தோன்றியவர்களும் இசைக்க வேண்டும். அப்போதுதான் நாம் பெருமையோடு தலைநிமிர்ந்து நடக்க முடியும். ஈழத்து இசை வல்லுனர்கள் ஒற்றுமையோடு ஒன்றுபட்டால் நிச்சயம் நல்ல கச்சேரிகள் கேட்கும் வாய்ப்பு நமக்குக் கிட்டும் என்பதில் சந்தேகமேயில்லை.

-இராசையா ஸ்ரீதரன்
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

ரூப வாஹினியில் இன்று

மாலை: 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்:

6-01: 'சீசாம் வீதி' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)

7-00: செய்திமஞ்சரி (தமிழ்)

7-15: 'மைன்ட் யுவர் லங்வெஜ்'
(ஆங்கில நகைச்சுவை நிகழ்ச்சி)

7-45: விளையாட்டுச் சாதனைகள் (கின்னஸ் புத்தகத்திலிருந்து)

8-15: செய்தி மஞ்சரி (சிங்களம்)

8-29: நாளைய நிகழ்ச்சிகள்:

8-30: சர்வதேச வர்த்தகம் பற்றிய ஆங்கில நிகழ்ச்சி

9-00: சிங்கள பாடல் நிகழ்ச்சி.

9-30: செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)

9-45: 'ஸ்டார்ஸ்கி அன்ட் ஹஜ்' துப்பறியும் தொடர்

10-40: நிகழ்ச்சிகள் முடிவு.

பஞ்சமர் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கதைஞர் வட்டம் 'பஞ்சமர்' நாவல் ஆய்வரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை கொக்குவில் விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. இராசையா தலைமையில் நடைபெறும் இவ்வாய்வரங்கிற்கு யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சிவலிங்கராசா, காவலூர் இராசதுரை தெளிவத்தை யோசப் மற்றும் பலர் ஆய்வுரை வழங்குவர். (சூ)

கிராம சபைத் தலைவர் தெரிவு

(சுழிபுரம்)

தொல்புரம் கிராமசேவையாளர் பிரிவு கிராமோதய சபைத்தலைவராக திரு. கா. சந்திராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். மூளாய் கிராம சேவையாளர் பிரிவு கிராமோதய சபைத்தலைவராக திரு. எம். சிவசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவனியாவில் நடைபெற்ற இளைஞர் விழா

(வவனியா)

தேசிய இளைஞர்சேவை மன்றம் நடத்திய இளைஞர்விழா, வவனியா நகரசபை மைதானத்தில் சிறப்பாகமுறையில் நடைபெற்றது.

முதல்நாள் நிகழ்ச்சியில் கருத்தரங்கும் கண்காட்சியும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன.

கருத்தரங்கை வவனியா நகரசபை மண்டபத்தில் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. எம். சிற்றம்பலம் ஆரம்பித்துவைத்தார். 'இளைஞரும் அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் கலந்துகொண்டனர்.

கண்காட்சியை நகரசபைக்கு அருகாமையிலுள்ள சைவப் பிரகாச வித்தியாசாலையில், நகரசபைத் தலைவர் திரு. ஜ. தேவேஸ்வரன் மங்களவிளக் கேற்றித் திறந்துவைத்தார். வவனியா விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. ரி. பத்மநாதன் கண்காட்சி திறப்பு விழாவில் கலந்துகொண்டார்.

இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம், இளைஞர்சேவை மன்றத்தின் நடமாடும் பயிற்சி நிலையம் ஆகிய அரசதுறை [தமிழ்ப்பிரிவு] வவனியா விவசாய இளைஞர், வலபரிபாலன திணைக்களம் ஆகியவை தமது விளம்பரப் பொருள்களை மக்கள் காட்சிக்காக வைத்திருந்தன. அத்துடன் அலங்காரத் தையல், பின்னல் வேலைகள், ஓலையினலும், வயரினலும் தயாரிக்கப்பட்ட பலதரப் பட்ட அலங்காரப்பொருட்களும் வைக்கப்பட்டிருந்தன. வனபரிபாலன திணைக்களத்தினர் மரக்கன்றுகளை விற்பனைக்கும், காட்சிக்கும் வைத்திருந்தனர்.

விவசாயபிரிவினரின் "உயிர்வாயு" உற்பத்திமுறைபற்றி செய்முறை உபகரணம் இயங்கிவருவதைக் காணப்பட்டது.

வேரோடு பிடுங்கி எறியப்பட்டு பொலிதீன் உறைகளில் நாணப்பட்ட புதிய நெல்லின பயிர்கள், சேனல 4 காதமை பயிர், பம்பாய் வெங்காயம், நல்லின மிளகாய்க் கன்றுகளும் இருந்தன.

ஐந்து அடி நீளமான சுரைக்காய் மக்களின் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.

காலை 10-00 மணி தொடக்கம் இரவு பத்து மணிவரை நடைபெற்றகண்காட்சியை பொது மக்களும் பாடசாலைப் பிள்ளைகளும் திரளாகக் கண்டுகளித்தனர். விழாவின் இறுதி தினத்தன்று நகரசபை திறந்தவெளி அரங்கில் பரிசளிப்புவைபவம் இடம்பெற்றது.

விழாவுக்கு பிரதம அதிதிகளாக தேசிய இளைஞர்சேவை மன்றப் பணிப்பாளர் திரு. சந்திராசிசாநாயக்கா, இளைஞர் சேவை மன்ற இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. சுரநிமல ராஜபக்ஷ ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர். வடமத்திய பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற பிரதிப் பணிப்பாளர் திரு. எதிரிமான்னவும் கலந்துகொண்டனர்.

வவனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி திரு. சிவபாலசிங்கம் நன்றி கூறினர். இவரே விழா தொடர்பான சகல ஏற்பாடுகளையும் சிறப்பாகமுறையில் கவனித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மறைந்த ஆசிரியர் குடும்பத்திற்கு நன்கொடை

[சுழிபுரம்]

செல்லராசா அனுராதபுரத்தில் நடைபெற்ற சாரணியர்கள் விழாவில் கலந்துகொள்ளச் சென்று திடீரென மரணமான வட்டு யாழ்பரணக் கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். சச்சிதானந்தத்தின் சேவை மீது நிமித்தம் இவரது குடும்பத்தினருக்கு ரூபா பத்தாயிரம் கொண்ட ஓர் காசோலை இலங்கை சாரணியர் ஆணையாளரால் உடன் வழங்கப்பட்டது.

அதேபோல யாழ்ப்பாணக் கல்லூரியினர் மரணச்செலவுக்கு உடன் இரண்டாயிரம் ரூபா உதவினர்.

கல்லூரி ஆசிரியரும் பெரும் தொகைப் பணத்தை சேர்த்து வழங்க முன்வந்துள்ளனர்.

இயக்குநர் சபைத் தேர்தல்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தேர்தல் இம்மாதம் 27 ம்திகதி நடைபெறவுள்ளது.

இச்சங்கத்தைச் சேர்ந்த 96 கிளைத் தலைவர்களுக்கிடையே இத் தேர்தல் நடாத்தப்பட்டு 7 பேர் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்படும்.

இப்பொழுது இயங்கிவரும் 7 பேர் கொண்ட இயக்குனர்களில், தவணைப்பிய உடன் காரருக்கு பிணை நின்ற உறுப்பினர் ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மா)

ஆலய வீதி சிரமதானம்

[மயிலிட்டி]

குரும்பசிட்டி இந்து இளைஞர் மன்றத்தினர் தமது ஆரம்பசிரமதானப் பணிமூலம் குரும்பசிட்டி அம்மன் ஆலயவீதியினைத் துப்பரவு செய்துள்ளனர். அண்மையில் தான் இம்மன்றம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(சு)

கண் சிகிச்சை

[மன்னார்]

மன்னார் பகுதியைச் சேர்ந்த கண் நோயாளர்களுக்கு இலவச சிகிச்சையளிக்கவென மேமாதம் கண்நோய் சிகிச்சையளிக்கும் வைத்திய குழு ஒன்று இங்கு விஜயம் செய்யும்.

இவ்வைத்திய குழு கண்நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதுடன் தேவையேற்படின் சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளும்.

கலாநிதி டாக்டர் பி ஏ. வீரசிங்க தலைமையில் வரும் இக்குழுவில் 40 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

சிரமதானமூலம் மயானம் திருத்த நடவடிக்கை

[மயிலிட்டி]

வயாவிளான் குட்டியப்புலம் பிரதேசமயானம் மிகவும் சீரழிந்த நிலையில் காட்சியளிப்பதுடன் அங்கு கிரியைகள் செய்ய முடியாத படி பற்றைகள் பற்றி இருக்கின்றன. இதனை மேலும் மோசமான நிலைக்குப் போகவிடாது, சிரமதானப் பணிமூலம் பாதையையும், மயானத்தையும் துப்பரவாக்க வயாவிளான் கிராம சேவை அலுவலர் திரு யோ. அருளானந்தம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதனைதொட்டி பொது மக்களுக்கு அவர்விடுத்தஅறிக்கையில் "நல்மனம் உள்ளவர்களாகவே உணர்ந்து எம் ஆலயங்கள், வீடுகள் போலச் சகல சேமக்காலைகளையும் மயானங்களையும் மிகவும் சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்க கடமைப் பட்டவர்களாவர். அதன் புனிதத்தைப்பேண எல்லாரும் முன்வரவேண்டும்" எனக்கேட்டுக் கொண்டுள்ளார்.

(சு)

பரிசு பெற்றனர்

(அரியாலை)

கல்வி அமைச்சு, மகாவலி அமைச்சு ஆகியன இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்துநடாத்திய யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மகாவலி அறிவுப்பேச்சுப் போட்டியில் யாழ் பரியோவான் கல்லூரி மாணவனான செல்வன் தயாகரன் யேசுரத்தினம் முதலாம் இடத்தைப் பெற்றார். யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி விஜயகோன் 1000 ரூபா பரிசை இவருக்கு வழங்கினார்.



1ம் பரிசு பெற்றார்

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் ஈ. ராஜசெல்வன், இரண்டாம் இடத்தைப் பெற்றார். இவருக்கு ரூபா ஐநூறு பரிசாக வழங்கப்பட்டது.

முதலாவது இடத்தைப் பெற்ற செல்வன் தயாகரன் யேசுரத்தினம் யாழ். பரியோவான் கல்லூரியில் கல்விபொதுத்தராதர உயர்தர வகுப்பில் கல்விகற்கிறார். உயர்தர வகுப்பு மாணவர் சங்கத் தலைவராகவும், கல்லூரியின் மாணவர் தலைவராகவும் பணிபுரியும் இவர், யாழ். மாவட்ட நீதிபதி திரு. எம். டி. யேசுரத்தினம், யாழ் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி யேசுரத்தினம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனுவார்.

கல்லூரியில் நடைபெற்ற ஆங்கிலம், தமிழ் பேச்சுப் போட்டிகளிலும் இவர்முதலாமிடத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(அரியாலை நிருபர்)

மீண்டும் கிடைக்கின்றது



ஜப்பானிய பம்ப் தொழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டெர்க்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

- நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
- மண்ணெண்ணை கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
- மொத்த நிறை 28 கிலோ (61 றுத்தல்)
- ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு,
ஹேலீஸ் லிமிட்டெட்
25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

எமது பகுதி மாவட்ட ஏக விற்பனையாளர்:
கல்யாணி ஸ்ரோர்ஸ் 31, நியூ மார்க்கட், சுன்னாகம்.

Mel Ads

லொறியில் நசுங்குண்டு சிறுவன் மரணம்

(வவனியா)

ஐஸ்கிறீம் வாங்கிக்கொண்டு தெருவைக் கடக்க முற்பட்ட சிறுவன் லொறி மோதியது. இரத்த வெள்ளத்தில் ஸ்தலத்திலேயே சிறுவன் துடிதுடித்து மரணமானான்.

இச்சம்பவம் மன்னார் வீதி சாளம்பைக் குளத்தில் நடந்துள்ளது. செய்யது றிஸ்வான் என்ற எட்டுவயதுச் சிறுவனே பரிதாபகரமாக மரணமான சிறுவனுவான்.

வவனியா நகரிலுள்ள ஒரு பிரபல தனியார் வங்கி ஆலோசகருக்குச் சொந்தமான இந்த லொறி மன்னார் வீதி வழியாக செல்லும்போதே இவ் விபத்து ஏற்பட்டது.

சிறுவனது மரணம் தொடர்பான விசாரணை வவனியா மாவட்டப் பதில் நீதவான் திரு. ஆர். வி. வரதராஜா மூன் நடந்தது.

விசாரணையின்போது சம்பவத்தை நேரில் கண்ட செய்யது காசிம் புகாரி என்பவர் சாட்சியமளித்தார்.

பிரேதபரிசோதனையை வவனியா மாவட்ட பதில் வைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரன் மேற்கொண்டார்.

லொறிசாரதி செல்லத்துரை என்பவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டு விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

சாட்சிகளைப் பொலிஸ் அதிகாரி திரு. அமரதாச ஆஜர் செய்தார்.

(சு)

இன்று ஆரம்பமாகும் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே இன்று ஆரம்பமாகும் கிரிக்கெட் போட்டிகளின் விபரம் வருமாறு:

யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து, செண். ஜோசப்ஸ் கல்லூரி மோதும். இப்போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

செண். பற்றிக்ஸ் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து மோதும். இப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மோதும். இப்போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். மத்திய கல்லூரி கொழும்பு ஆனந்தாக் கல்லூரியுடன் கொழும்பில் மோதுகின்றது.

(வி)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 4-15 7-00
சனி. ஞாயறு 1-0
ரவிச்சந்திரன்- ஜெயலலிதா
நான்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
ராஜா வீட்டுப் பிள்ளை

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ். நகர்]
ஜெய்சங்கர் - ராஜஸ்ரீ
சுந்தரராஜன் - நிர்மலா
நீதிதேவன்
(புதிய பிரதி)

றீகல் [யாழ். நகர்]
கடைசி இரு தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி நடித்த
பச்சை விளக்கு
விரைவில்!
சட்டம் ஒரு இருட்டறை

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00, 9-30.
Charlton Heston:
"EARTH QUAKE"
Action-Scope-Color
12-3-83 சிவராத்திரி நள்ளிரவு காட்சியுமுண்டு.

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் — சௌகார்ஜானகி
துணைவன்
பாடசாலை மாணவர்களுக்கு விசேட காட்சி ஒழுங்கு செய்யப்படும்

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
[கலர்]

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன்கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - லதா - தங்கவேலு - தேங்காய் சீனிவாசன் நடித்த
ஞானக்குழந்தை
12-3-83 மஹாசிவராத்திரியை முன்னிட்டு நள்ளிரவு காட்சி காண்பிக்கப்படும்.
16-3-83 புதன் முதல்
சிவகுமார், சரிதா, சில்க் சுமிதா
வண்டிச்சக்கரம்
(கலர்)

சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ்,
ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
வருகிறது!
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

பாடசாலை கிரிக்கெட் போட்டி முடிவுகள்

யாழ். இந்துக் கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி!

யூனியன் வீரர் சத்தியபாலன் சிறந்த துடுப்படி வீரர்

- விளையாட்டு நிருபர் 'தேவா' -

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே நடைபெற்று முடிந்த கிரிக்கெட் போட்டிகளின் விபரம் வருமாறு:-

வெற்றி-தோல்வி இல்லை

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி எத்தரப்தனருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 195 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டி ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 7 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. அதன் பின் துடுப்பெடுத்தாடிய வீரர்களான ரி. ஆனந்தராஜா, எஸ். எம். மிலானியசும் சிறப்பாகவும் வேகமாகவும் துடுப்பெடுத்தாடியே முறையே 64, 57 ஓட்டங்களைப் பெற்றனர். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்து வீச்சாளர்களான தர்மகுமார், மக்கின்டாஸ் ஆகியோர் முறையே 4, 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

சென். ஜோன்ஸ் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 223 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் நிஷ்யந்தன் 56 ஓட்டங்களையும், முரளிதரன் 47 ஓட்டங்களையும் பெற்றனர். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பந்து வீச்சுவீரர் எஸ். டபிள்யூ. கிங்ஸ்லி 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி 2வது இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்துக்கு 129 ஓட்டங்களைப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் வீரர் அரியராஜா ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கது சென். ஜோன்ஸ் கல்லூரி 2வது இன்னிங்ஸில் விக்கெட் நஷ்டமின்றி 10 ஓட்டங்களைப் பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திருவாளர்கள் டி. எம். வேதாபரணம், எஸ். உமாகாந்தன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

யாழ். இந்து வெற்றி

யாழ் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 7 விக்கெட் நஷ்டத்துக்கு 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வை. ஜெயநாதன் 64 ஓட்டங்களையும், எம். சிவக்குமார் 43 ஓட்டங்களையும் பெற்றனர். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பந்து வீச்சு வீரர் ரி. நந்தக்குமார் 63 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யாழ் இந்து வீரர் ரி. அன்பன் 53 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். கொக்குவில் இந்து 2வது இன்னிங்ஸில் மொத்தம் 73 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரி. அன்பன் 33 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இப்போட்டிக்கு திருவாளர்கள் எஸ். எஸ். ராசையா, பி. டேவிற் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

யூனியன் இன்னிங்ஸால் வெற்றி

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், யூனியன் கல்லூரி 10 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 216 ஓட்டங்களைப் பெற்றது இதில் வீரர் ஜே. சத்தியபாலன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 110 ஓட்டங்களைப் பெற்றார். வீரர் சத்தியபாலன், யாழ். மாவட்டக் கல்லூரிகளிலேயே சிறந்த துடுப்படி வீரர்களில் ஒருவர் என கிரிக்கெட் அவதானிகள் கருத்து தெரிவித்தார்கள். இவர், கடந்த போட்டிகள் அனைத்திலுமே சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மானிப்பாய் இந்து முதல் இன்னிங்ஸில் 107 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 153 ஓட்டங்களையும் பெற்றது. இதில் வீரர் ஜெயசீலன் 52 ஓட்டங்களைப் பெற்றார் யூனியன் கல்லூரி பந்து வீச்சுவீரர் எம். சனஜீவன் இப்போட்டியில் மொத்தம் 12 விக்கெட்டுகளை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு திருவாளர்கள் எம். சிதம்பரப்பிள்ளை, ஐ. எஸ். சத்தியநாதன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்,

வெற்றி-தோல்வி இல்லை

யாழ். மத்திய கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 219 ஓட்டங்களைப் பெற்றது. வீரர் சுதர்சனன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 77 ஓட்டங்களைப் பெற்றார், ஹாட்லிக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 148 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்துக்கு 144 ஓட்டங்களைப் பெற்றது இதில் வீரர் மனோகரன் 66 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ். மத்திய கல்லூரி 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட் நஷ்டத்துக்கு 156 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வீரர் சுதர்சனும், வீரர் போலும் ஆட்டமிழக்காது முறையே 71, 56 ஓட்டங்களைப் பெற்றனர்

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திருவாளர்கள் கே. ராமநாதன், எஸ். சிவஞானசேகரம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள். [வி]

இன்றைய பலன்

மாசி மாதம் 27-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(11—3—83)

மேடம்: புதுமையான எண்ணங்கள் உதிக்கும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் புதிய சாதனைகளை உருவாக்குவார்கள், வாகனம் செலுத்துவோர் நன்மை அடைவர்.

இடபம்: இரக்கசிந்தைமேலிடும், மற்றவர்களுக்கு உதவுவதில் மகிழ்ச்சி அடைவீர்கள், வீட்டில் உள்ளவர்களின் அன்பு தாராளமாகக் கிடைக்கும்.

மிதுனம்: பணமுடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள், கடன் தொல்லைகளும் அதிகரிக்கும், நம்பியிருந்த இடத்திலிருந்து ஏமாற்றமான செய்தி கிடைக்கலாம், மனத்தளர்ச்சிக்கு இடம் கொடாது நடக்கவும்.

கடகம்: பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள், இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம்.

சிங்கம்: முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தை தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வர், கணவன் மனைவி உறவு முறைகளில் பூசல்கள் நிறைந்திருக்கும்.

கன்னி: பிதா வழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கலாம், ஏழைகளிடத்தில் இரக்கசிந்தை காட்டுவீர், பிறந்தகத்தின் நினைவு உருவாகும், பெரியவரின் ஆதரவு கிடைக்கும்.

துலாம்: உண்மை வழியில் உயர்வடைவீர்கள், மேலதிகாரிகளின் நம்பிக்கை உம்மீது பதியும், குடும்பத்தில் குதூகலம் நிலவும், பெண்கள் போற்றப்படுவார்கள்.

விருச்சிகம்: தேடிய இன்பம் இன்று காலடியில் கிடைக்கும், மூத்தோர்கள் உதவிக்கும் இடமுண்டு, சிலருக்கு தெய்வ வழிபாட்டில் பக்தி உருவாகும்.

தனு: அடிசறுக்கும் நிகழ்ச்சி இன்று இடம் பெறலாம், நெஞ்சமும் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும், ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு.

மகரம்: ஆத்திரப்படுவதால் நண்பர்களை பகைத்துக் கொள்ளநேரிடும், பெண்களின் தொடர்புகளை இன்று தவிர்த்துக்கொள்ளவும், காதலில் பிரச்னை உருவாகும்.

கும்பம்: தந்தை வழித்தானியங்கள் தப்பாமல் கிடைக்கும் நாடகக்கலைஞர்களுக்கு பொன்னான தினம், நல்லதைச் செய்வீர்கள் நலன்பெருகும்.

மீனம்: துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள், வாழ்க்கையில் அவப்பெயருக்கு இடமுண்டு, எக்காரணத்தைக் கொண்டும் திடீர் முடிவுக்கு வரவேண்டாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

ஜீப் மோதி

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தலையில் காயமடைந்தமேற்படி லிகிதர் உடனடியாக தனியார் வாகனமொன்றில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

சம்பவம் பற்றி அறிந்ததும் காங்கேசன்துறை பொலிஸ் போக்குவரத்துப்பகுதி கான்ஸ்டபிள் திரு. மாணிக்கவாசகர் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினார்.

வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 10 000க்கு மேற்பட்ட சாக்குகள் கேள்வி மூலம்விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா. 25/- மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாகச் சங்கத்தில் செலுத்திய ரூபா. 100/-க்குரிய பற்றுச்சீட்டு இலக்கத்தையும் குறிப்பிட்டு 23-03-83க்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும், கேள்விப் பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் "வெற்றுச் சாக்குக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
கட்டைவேலி நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.
கரவெட்டி.
09-03-83. 6491

அணிசேரா நாடுகள் தலைவர்களுக்கு

பலத்த பாதுகாப்பையும் மீறி துண்டுப்பிரசுரம் விநியோகம்!

[புதுடில்லி]

புதுடில்லியில் நடைபெற்று வரும் அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும் ஆசிய ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் தமிழ் ஈழ விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் இலங்கை தமிழர் நிலைபற்றிய விபரம் அடங்கிய மகஜர் பிரதிகளை கையளித்தனர்.

தமிழ் ஈழ மக்கள் கொடுமைப்படுத்தப் படுவதாகவும் உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள அம் மகஜரில் ஐ. நா. சபையின் மனித உரிமைகள் சாசனத்துக்கமைய தமிழ் ஈழமக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண உதவும்படி அணிசேரா இயக்கத் தலைவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன் உச்சி மகாநாட்டுத் தலைவர்களுக்குத் தனித்தனியே எழுதியுள்ள ஒரு கடிதத்தில் பாலஸ்தீனியர் விடுதலை இயக்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது போன்று தமிழ் ஈழவிடுதலை இயக்கத்துக்கும் அணிசேரா இயக்கத்தில் 'பார்வையாளர்' அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

திரு நெடுமாறனின் கடிதம் பற்றிய செய்தி மகாநாட்டு பணிமனையிலிருந்து வெளியாகிக்கொண்டிருந்த அதே சமயம் சில அடையாளம் தெரியாத இளைஞர்கள் இலங்கையில் தமிழ் இனக்கொலை நடப்பதாகத் தெரிவிக்கும் பிரசுரங்களை பத்திரிகை நிருபர்கள் மத்தியில் விநியோகித்துக் கொண்டிருந்தார்கள். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி இவ்விளைஞர்கள் பத்திரிகையாளர் பகுதிக்குள் எப்படி நுழைந்தார்கள் என்பது அதிகாரிகளுக்கு பெரும் ஆச்சரியம் அளிப்பதாய் இருந்தது.

சென்னையில் ஆர்ப்பாட்டம்

இலங்கை ஜனாதிபதி அணிசேரா நாடுகள் உச்சிமகாநாட்டில் கலந்து கொள்ள இந்தியாவுக்கு விஜயம் செய்திருப்பதை யொட்டி கடந்த திங்கட்கிழமை சென்னையில் மாணவர் சம்மேளத்தைச் சேர்ந்த சுமார் 300 பேர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள் ஆபட்ஸ் பரிசந்தியிலிருந்து அண்ணாசிலை வரை இந்த ஊர்வலம் நடைபெற்றது. [இ]

தமிழ்ஈழ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வுத்திட்டவிவாதத்தின் போது பாராளுமன்றத்தில் பேசும் போதுநேற்றுக் கூறினார்.

உணவு முத்திரையை அதிகரிக்கக்கோருகிறீர்கள் இதற்கு மேலதிகமாகப் பணம் தேவைப்படுகின்றது. பணத்துக்கு எங்கே போவது? யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை எடுத்து யாழ்ப்பாண மக்களுக்கு உணவு முத்திரை வழங்குவதற்கு சம்மதிக்கிறீர்களா? என்று அமைச்சர் மேலும் கேட்டார்.

எமது அரசின் கொள்கை சரியில்லை யென்று ஜனாதிபதி தேர்தலிலும் பொதுசன வாக்கெடுப்பின் போதும் எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்து பார்த்தனர் ஆனால் அதுபலிக்கவில்லை. இருநடவைகளிலும் மக்கள் எமக்கு சாதகமாகவே தீர்ப்பளித்து விட்டார்கள் என்றார். [இ]

ஜனாதிபதி-நிதிமந்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

18ம் திகதி இரவு ஓரளவு விலைகுறைந்த பாணையும் ஏனைய பொருட்களையும் பயன்படுத்திவிட்டு படுக்கைக்குச் சென்ற மக்கள் 19ம் திகதி காலையில் எழுந்தவுடன் இரவோடிரவாக சகல பொருட்களும் விலையேறியிருப்பதைக் கண்டார்கள், இத்தனையையும் செய்துவிட்டு 100 ரூபாய் சம்பள உயர்வு அளித்திருக்கிறீர்கள். இதுவும்கூட தவிர்க்க முடியாத நிலையிலேயே செய்யப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளருக்கும் இச்சம்பள உயர்வு கிடைக்கும் என்பது தெளிவில்லை உணவு முத்திரைகள் இப்போதைய விலைவாசி உயர்வுக்குஏற்றதாய் இல்லை. இதனை அமைச்சர் மீளாய்வு செய்து ஏழை மக்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும்.

வேலைவாய்ப்பு

12 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாக நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இவர்களில் 5 ஆயிரம் பேரும்கூட தமிழர்கள் இல்லை. 5000 பேருக்கு ஆசிரியர் பதவி வழங்கப்பட்டுள்ளது இதில் தமிழர்களுக்கு 1000 வழங்கப்படும் என்று கல்வி மந்திரி வாக்களித்திருந்தார். ஆனால் 500 பேருக்கும் கூட இப்பதவி வழங்கப்படவில்லை. பொலிஸ்மா அதிபர், பிரதிபொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்வதில் அர்த்தமில்லை. இப்படியான பதவிகளைப் பெறுவதற்கு இன்னும் எத்தனை சகாப்தங்கள் காத்திருக்கவேண்டியிருக்கும்.

திரு. சிவகிதம்பரத்தை அடுத்து அரசதரப்பில் வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வரவுசெலவுத் திட்டத்தின்மீது பேசினார்.

நிதியமைச்சரின் கருத்துக்கும் ஜனாதிபதியின் கருத்துக்கும் எதுவித முரண்பாடும் இல்லை. நாங்களோ நிதி அமைச்சரோ அல்லது ஜனாதிபதியோ உலக வங்கிமீது அல்லது சர்வதேச நாணய சபைமீது காதல்கொண்டு அங்குசெல்லவில்லை. எமக்கும் பணம் தேவைப்படுகின்றது. பணம் தேவைப்படும்போது பொதுமக்கள் மக்கள் வங்கிக்குப் போவதுபோல் நாம் அங்கு செல்கிறோம் என்றார்.

திருமலையைச்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தங்கியிருப்பவர்.

க. செல்வராசா, யாழ். பல்தொழில்நுட்பக்கல்லூரியில் விரிவுரையிலிருந்தபோது இரகசியப் பொலிசாரால் அழைத்துச்செல்லப்பட்டார்.

வி. செல்லத்துரை என்ற மாணவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (மா)

'சிவா-யோகேஸ்'

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கோள்விடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியுள்ள வீடுகள் சிலவற்றை இராணுவத்தினர் சோதனையிட்டதையடுத்து வீடுகளில் தங்கியிருக்கும் மாணவர்களை வீட்டு உரிமையாளர்கள் வெளியேற்றியுள்ளனர்.

தொழில்நுட்ப...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தபோதே கைது செய்யப்பட்டார். இன்னமும் அவர் விடுதலை செய்யப்படவில்லை, அவரை உடனடியாக விடுதலை செய்ய ஏற்பாடு செய்யங்கள் என்று மகஜரில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்கொண்டு என்ன செய்வது என்பது குறித்து மாணவர்கள் அடுத்த வாரம் கூடி முடிவு செய்யவிருக்கிறார்கள்.

ஈ. வெ. ரா. நினைவாக சிலை, நூலகம்

சென்னை, மார்ச், 10

கேரளாவில் ஈ. வெ. ரா பெரியாரின் நினைவாக பதினொன்றரைலட்சம் ரூபா செலவில்சிலையும், நூலகமும், சிறுவர் பூங்காவும் அமைக்க தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளது.

ஈ. வெ. ரா. பெரியாரின் வாழ்க்கை வரலாறு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தமிழ்நாடு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். [illegible] வீரப்பன் தெரிவித்தார்.

தனியார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதில்லை என்று முடிவெடுத்து நேற்று நண்பகல் தொடக்கம் மாணவர்கள் வகுப்புகளுக்கு செல்லாமலிருந்து வருகிறார்கள்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் சகல பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் நேற்று நண்பகல் கூடி நீண்டநேரம் இது பற்றி ஆலோசனை நடாத்தினர்.

தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் மாணவர்களை மட்டும் ஆயுதப்படையினர் கைது செய்வதுடன் நின்றுவிடுவதில்லை யென்றும் அவர்கள் தங்கியிருக்கும் வீடுகளின் உரிமையாளர்களும் கூடக் கைது செய்யப்படுகிறார்கள் என்றும் இதனால் மற்றும் வெளியிடங்களிலிருந்து வந்துள்ள மாணவர்கள் தங்கியிருக்கும் வீட்டுக்காரர்கள் மாணவர்களை வீட்டில் வாடகைக்கு இருக்க வேண்டமென கலைத்துவிட்டார்கள் என்றும் இதனால் மாணவர்கள் பெட்டி படுக்கைகளுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். என்றும் கூறப்பட்டது

2,500 மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்கள். இதில் 1200 மாணவர்கள் வெளியில் தனியார் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள். யாழ். பல்கலைக்கழகவிடுதியில் 40 மாணவிகளும், 40 மாணவர்களும் தங்கியிருக்கிறார்கள். மேலும் 20 மாணவர்கள் மட்டும் தங்கியிருப்பதற்கே வசதியிருக்கிறது.

● பல்கலைக்கழகவளவுக்குள் 1000 மாணவர்களாவது தங்கியிருக்கக்கூடியதாக வசதி செய்து தரப்பட வேண்டும். பேச்சுமூலமாக நிர்வாகம் உறுதியளிக்காமல் எழுத்து மூலமாக மாணவர் அவையிடம் ஒப்படைக்க வேண்டும்

● மாணவர்கள் தங்குவதற்கான விடுதி அமைக்கும் இடைக்காலத்துக்குள் எந்த மாணவரையாவது கைது செய்ய நேரிடின பல்கலைக்கழக உபவேந்தர் அனுமதி பெற வேண்டும்.

● இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் ஒருவர் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் ஆகிய மூவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இந்த மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. எஸ். தர்மபாலன் மாணவர் ஆலோசகர் பேராசிரியர் மகேஸ்வரன் மற்றும் கலை, விஞ்ஞான பீடாதிபதிகளுடன் மாணவர் அவைத்தலைவர் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

இக்கோரிக்கைகள் சம்பந்தமாக ஆராய்ந்த உயர்மட்டக் குழு, இராணுவப் பொறுப்பதிகாரியைச்சந்தித்து மாணவர்களின் நிலையை குறித்து எடுத்துப் பேசுவதற்கு நேற்றுப் பிற்பகல் சென்றது.

அத்துடன் மாணவர்களின் கோரிக்கைகள் அடக்கிய மகஜர்கள் பல்கலைக்கழக நிர்வாகம், உயர்கல்வி அமைச்சு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சர், யாழ். அரசாங்கஅதிபர், உபவேந்தர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [மா]

தெரிவுக்குழு உறுப்பினர்கள்

[கொழும்பு]

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினருமான திரு. கே. சி. ஈ. டி. அல்விஸ் ஜனாதிபதிக்குத் தெரிவித்த முறைப்பாடு தொடர்பாக ஆராய்வதற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக நீதியமைச்சர் டாக்டர் நிஸங்காவிஜரட்னா இருப்பார். அமைச்சர்கள் தேவநாயகம், பெஸ்டஸ் பெரேரா, ரணில் விக்கிரமசிங்கா, பிரதியமைச்சர் ஹரீந்திரா கொரியா ஆகியோருடன் நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர். [இ]

சிவராத்திரி நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இணிங்கித் தோட்ட முத்துக்குமார சுவாமி கோயில் மகா சிவராத்திரி விழா நாளை சனிக்கிழமை கோயில் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கதாப்பிரசங்கம், பக்திப் பாடல்கள், வில்லிசை ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

நான்கு சாமங்களும் விசேடபூசை அபிடேகங்களும் இடம் பெறும். ஞாயிறு அதிகாலை அன்னதானம் வழங்கப்படும்.

● ●

[யாழ்ப்பாணம்]

மகாசிவராத்திரியை முன்னிட்டு யாழ். சைவ மகளிர் மன்றம் நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்திவினாயகர் ஆலயத்தில் விசேஷ நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது. நாளை இரவு 9 மணி தொடக்கம் காலை 9-30 மணிவரை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

இன்று கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

புதுடில்லி தேசிய அரும் பொருட்காட்சிச்சாலை இயக்குனரும் சைவக்கலை சம்பந்தமான நூல்களின் ஆசிரியருமான அமரர் சி. சிவராமமூர்த்தி நினைவாக 'சிவதரிசனம்' என்னும் கண்காட்சி இன்று தொடக்கம் 14-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மகாசிவராத்திரியை முன்னிட்டு நடைபெறும் இக்கண்காட்சி யாழ். பல்கலைக்கழக நூலகத்தின் தென்னாசிய அறையில் இடம் பெறும். (ப)

இந்திரா-ஷியாவுல்ஹக் பேச்சுவார்த்தை

புதுடில்லி, மார்ச் 10

இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியும், பாசிஸ்தான் ஜனாதிபதி ஷியாவுல்ஹக்கும் நேற்று புதுடில்லியில் சந்தித்து பரஸ்பரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

★ வெளிநாட்டுப் பயணமா?

யாழ்ப்பாணத்திலேயே குறைந்த கட்டணத்தில் எந்த நாட்டிற்கும் விரும்பிய விமானத்தில் செல்ல

★விமான டிக்கட்டுகள்

★பிரயாண காசோலைகள்

(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

மக்கினொன் டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

த. பெ. எண் 92, தொலைபேசி: 24154

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.